


**14.08.2024**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் 78ஆவது சுதந்திர பெருவிழாவை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்றிரவு நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.

2. ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை பாதுகாக்கும் அரணாக நாட்டு மக்கள் திகழ வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

3. இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கம் ஒருமைப்பாட்டையும், தேசப்பற்றையும் பறைசாற்றுவதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத்துறை உதவியாளர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் வழங்கினார்.

5. **USA** சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்திய வீரர்கள் இன்று களமிறங்குகின்றனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

***********

<u>சுதந்திர தினம் டெல்லி</u>

நாட்டின் 78-வது சுதந்திர தின விழா நாளை கொண்டாடப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தலைநகர் டெல்லியில் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

சுதந்திர தின பெருவிழாவை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாட்டு மக்களிடையே இன்று இரவு 7 மணிக்கு உரையாற்றுகிறார்.

ஆகில இந்திய வானொலியின் அனைத்து அலைவரிசைகளிலும் குடியரசுத்தலைவரின் உரை நேரடியாக ஒலிபரப்பபடுகிறது.

குடியரசு தலைவர் உரையின் தமிழாக்கம் இன்று இரவு ஒன்பதரை மணிக்கு ஒலிபரப்பாகும்.

சுதந்திர பெருவிழாவை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி, தில்லி செங்கோட்டையில் நாளை காலை மூவர்ண தேசிய கொடியை ஏற்றி முப்படையினரின் அணிவகுப்பு மரியாதை ஏற்றுக்கொள்கிறார்.

பல்வேறு மாநிலங்களின் பாரம்பரிய மரபுகளை உள்ளடக்கிய கலாச்சார கலை நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறுகின்றன.

சுதந்திர பெருவிழாவில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் 400 பிரதிநிதிகள் மற்றும் மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களின் குழந்தைகள் மகளிர் மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் 160 களப்பணியாளர்கள் பங்கேற்கின்றனர்.

நாட்டின் ஆளுமைக்கு இவர்கள் ஆற்றிவரும் பணிக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் மத்திய அரசின் சார்பில் சிறப்பு விருந்தினர்களாக இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திர பெருவிழாவில் பங்கேற்பதற்கு அடித்தட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்திருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் நாட்டின் பெருமையையும், தேசப்பற்றை பறைசாற்றும் வகையிலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக உள்ளாட்சி அமைப்புகளில் மகளிரின் தலைமைத்துவம் என்பது தொடர்பாக கருத்தரங்கு ஒன்று இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு.ராஜீவ்ரஞ்சன் சிங்,

இணை அமைச்சர் பேராசிரியர் எஸ்.பி.சிங் பாகேல் உள்ளிட்டோர் இதில் பங்கேற்பவர்களை இன்று கவுரவிக்க உள்ளனர்.

***********

<u>விருது</u>

சுதந்திர தினத்தையொட்டி நாடுமுழுவதிலுமிருந்து காவல்துறை, தீயணைப்பு படை, ஊர்காவல்படை உள்ளிட்ட சீர்திருத்த சேவைகளில் சிறப்பாக பணியாற்றிய ஆயிரத்து 37 பேர் குடியரசுத்தலைவர் விருதுக்கு அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தை சேர்ந்த 26 பேர் குடியரசுத்தலைவரின் வீர தீர விருதை பெற உள்ளனர்.

***********

<u>சுதந்திர தினம் தமிழ்நாடு</u>

சென்னை கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் நாளை தேசிய கொடியை ஏற்றிவைத்து விழா பேருரையாற்றுகிறார்.

இதையொட்டி புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் முழுவதும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்களை கொண்ட 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

9 ஆயிரம் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்கள் மூலம் சென்னையின் முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தீவிர வாகன தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தகைசால் தமிழர் விருது, டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருது, சிறந்த

உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளையும் முதலமைச்சர் நாளை வழங்குகிறார்.

***********

<u>சுதந்திர தினம் - ஒளிவிளக்கு</u>

75-வது அமுத பெருவிழாவையொட்டி மத்திய மாநில அரசு அலுவலகங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

நாகை மாவட்டம் நாகூர் தர்காவின் மினராக்கள் மூவர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

........ வாய்ஸ் ........

***********

<u>சுதந்திர தினம் - பாதுகாப்பு</u>

செங்கல்பட்டு சென்னை புறநகர் பகுதிகளான தாம்பரம் ரயில் நிலையம் உள்ளிட்ட ரயில் நிலையங்களுக்கு வரும் பயணிகளின் உடமைகள் முழுமையாக பரிசோதிக்கப்படுகின்றன.

ரயில் நிலையங்களில் நிறுத்தப்பட்டுள்ள இருசக்கர வாகனங்கள், ஆட்டோக்கள், நான்கு சக்கர வாகனங்களையம் போலீஸார் தீவிரமாக சோதித்து வருகின்றனர்.

***********

<u>பிரிவினை தினம்</u>

தேச பிரிவினை கொடுஞ்செயல்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

1947 ஆம்ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின் போது மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் மற்றும் தியாகங்களை நினைவு கூறும் வகையில் கடந்த 2021ஆம் ஆண்டுமுதல் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்ட செய்தியில் பிரிவினையால் பாதிக்கப்பட்ட மக்களை நினைவு கூறுவதாகவும், இதில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை பாதுகாக்கும் அரணாக நாட்டு மக்கள் திகழ வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

***********

<u>ஹர் கர் திரங்கா</u>

நாடுமுழுவதும் சுதந்திர பெரு விழாவை ஒட்டி ஹர் கர் திரங்கா இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கம் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா புதுதில்லியில் ள்ள அவரது இல்லத்தில் மூவர்ண தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

தேசத்தின் பெருமிதம், ஒற்றுமை, நேர்மை, நம்பிக்கையை முன்னெடுத்துச்செல்லும் வகையில் இந்த இயக்கம் நடைபெறுவது குறித்து அமைச்சர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

நாட்டின் விடுதலைக்காக இன்னுயிர் ஈந்த வீரர்களை பெருமையுடனும், தேசப்பற்றுடனும் நினைவு கூறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் தேதி தொடங்கிய இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கம் நாட்டு மக்களின் தேசப்பற்றை பிரதிபலிக்கும் வகையில் நாளை வரை நடைபெறுகிறது.

மக்கள் தங்கள் இல்லங்களில் தேசிய கொடியை ஏற்றி செல்.்.பி புகைப்படம் எடுத்து ஹர் கர் திரங்கா இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மக்கள் அஞ்சலகங்களிலிருந்து தேசிய கொடியை வாங்கி தத்தம் இல்லங்களில் ஏற்றி செல்.்.பி புகைப்படம் எடுத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்து வருகின்றனர்.

சிவகங்கை காரைக்குடி உள்ளிட்ட அஞ்சலக கோட்டங்களில் 2 லட்ச ரூபாய் மதிப்பிலான தேசிய கொடிகள் விற்பனையாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ஹர் கர் திரங்கா இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கத்தின் கீழ் மயிலாடுதுறை மாவட்டத்தில் அஞ்சல்துறை சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் பொதுமக்களுக்கு தேசிய கொடி வழங்கப்பட்டது.

***********

<u>துலிப் மலர் தோட்டம்</u>

குடியரசு தலைவர் மாளிகையில் அம்ரித் உத்யன், துலிப் மலர் தோட்டத்தை பொதுமக்கள் பார்வைக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று துவக்கிவைத்தார்.

அடுத்த மாதம் 15-ம் தேதிவரை மக்கள் இதனை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வரும் 29-ம் தேதி தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி விளையாட்டு வீரர்களும்,

செப்டம்பர் 5-ம் தேதி ஆசிரியர்கள் தினத்தை ஒட்டி ஆசிரியர்களும் இம்மலர் தோட்டத்தை பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குடியரசுத்தலைவர் மாளிகை இணையதளத்தின் மூலம் மலர் தோட்டத்தை பார்வையிடுவதற்கான நுழைவு சீட்டுகளை பதிவு செய்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

***********

<u>முதலமைச்சர்</u>

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத்துறையின் உதவியாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளோருக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று வழங்கினார்.

அதனை தொடர்ந்து திருச்சி துவாக்குடி அரசு கிளை அச்சகத்தில் கூடுதல் கட்டிடங்களை முதலமைச்சர் காணொலி மூலம் திறந்துவைத்தார்.

ஆதி திராவிடர் மாணாக்கருக்கான பள்ளி மற்றும் விடுதி கட்டிடம்,

திருப்பத்தூரில் மேம்படுத்தப்பட்ட ஏலகிரி, ஜலகம்பாறை சமூதாயம் சார்ந்த சூழல் சுற்றுலா தடம்,

மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் உள்ளிட்டவற்றையும் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

***********

<u>காவல்துறை பொறுப்பு</u>

திருப்பத்தூர் மாவட்டத்தில் குற்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது பாரபட்சமின்றி குண்டர் தடுப்பு சட்டம் பாயும் என்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக இன்று பொறுப்பேற்ற ஸ்ரேயா குப்தா தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாவட்டத்தில் போதை பொருட்கள் விற்பனை முற்றிலும் தடை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

கோவை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளராக பதவி ஏற்றுள்ள திரு.கார்த்திகேயன் மாவட்டத்தின் சட்டம் ஒழுங்கை சீராக நிலைநாட்ட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

போதை பொருள் தடுப்பு நடவடிக்கைக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் இதுதொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுக்ள அதிக அளவில் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் சமூகம் சார்ந்த பிரச்சனைகள் களையப்பட்டு சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படும் என்று புதிய காவல்துறை கண்காணிப்பாளர் திரு.ஆல்பர்ட் ஜான் தெரிவித்துள்ளார்.

***********

<u>திருச்சி - அமைச்சர்கள்</u>

திருச்சி காந்திமார்க்கெட் அருகில் அமைந்துள்ள புதிய பெட்ரோல் பங்கினை மாநில அமைச்சர்கள் திரு.எஸ்.ரகுபதி, திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் இன்றுகாலை திறந்துவைத்தனர்.

சிறை மற்றும் சீர்திருத்தங்கள் துறை தலைவர் டாக்டர் மகேஷ்வர் தயால், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

***********

<u>விழிப்புணர்வு பேரணி</u>

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் மழை நீர் சேகரிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணி திருவண்ணாமலையில் இன்று நடைபெற்றது.

பள்ளி மாணாக்கர் பங்கேற்ற இப்பேரணியையும், கிராமப்புறங்களில் பொதுமக்களுக்கு குறும்படங்கள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாகனத்தையும் ஆட்சித்தலைவர் திரு.பாஸ்கர பாண்டியன் துவக்கிவைத்தார்.

***********

பட்டாசு வெடி விபத்து

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மாயத்தேவன்பட்டியில் தனியார் பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடி விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

சென்னை கஞ்சா

சென்னை தாம்பரம் ஆவடி மாநகர காவல் நிலையங்களில் கைப்பற்றப்பட்ட ஆயிரம் கிலோ கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை அழிக்கும் பணியை காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம் சிங்கபெருமாள் கோவிலை அடுத்த தென்மேல்பாக்கம் பகுதியில் மருத்துவக்கழிவுகள் எரியூட்டும் இடத்தில் இவற்றை அழிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று சுமார் ஏழாயிரத்து 500 கிலோ கஞ்சா எரிக்கப்பட்ட நிலையில் 2ஆவது நாளாக நடைபெறும் இந்த பணிகளை ஏராளமான காவலர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

***********

செயற்கைகோள்

புவி கண்காணிப்பிற்கான **EOS – 0 8** செயற்கைகோள் ஸ்ரீஹரிகோட்டா சத்திஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து நாளை விண்ணில் செலுத்தப்படுவதாக இருந்த நிலையில் நிர்வாக காரணங்களுக்காக நாளை மறுநாளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை மறுநாள் காலை மணி 9.17க்கு சிறிய ரக **SSLV D-3** ராக்கெட் மூலம் இது விண்ணில் ஏவப்படுகிறது.

***********

கப்பல்

நாகை இலங்கை காங்கேசன் துறை இடையே கப்பல் பயண சேவை நாளை முதல் தொடங்குகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

நாளை காலை 10 மணிக்கு புறப்படும் இந்த கப்பல் இலங்கை காங்கேசன் துறையை பிற்பகல் 2 மணிக்கு சென்றடையும்.

133 பயணிகளை கையாளும் வகையில் இக்கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

***********

மாஞ்சோலை

நெல்லை மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் கன மழை காரணமாக மாஞ்சோலை பகுதிகளுக்கு சூழல் சுற்றுலா சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக வனத்துறை அறிவித்துள்ளது.

***********

<u>வானிலை</u>

தென் தமிழகத்தில் தென் மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

கன்னியாகுமரி தென்காசி தேனி திண்டுக்கல் மதுரை திருப்பூர் நீலகிரி ஈரோடு தர்மபுரி கிருஷ்ணகிரி திருப்பத்தூர் வேலூர் கரூர் திருச்சி சேலம் நாமக்கல் மாவட்டங்கள் மற்றும் கோவை திருநெல்வேலி மாவட்ட மலைபகுதிகளில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***********

<u>டென்னிஸ்</u>

**USA** சர்வதேச சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சந்திரசேகர், கலியாந்தா புனாச்சா, நெடுஞ்செழியன், பிரசாந்த் ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

***********